REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2021 மார்ச் 24 புதன்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

89 1932 2021

வரு. 89 இல. 71 | 28பக்கங்கள் | March 24,Wednesday, 2021 | 30/-


## மகாநாயக்க தேரருக்கு
## பூரண அரச மரியாதையுடன் இறுதிக் கிரியைகள் நாளை



அமரத்துவமடைந்துள்ள இலங்கை அமரபுர பௌத்தமத பீடத்தின் மகாநாயக்க தேரர் வணக்கத்துக்குரிய கொட்டுகொட தம்மவாச தேரரின் இறுதிக் கிரியைகள்

06













### ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது தொடரில்

# இலங்கை தொடர்பான பிரேரணை நிறைவேற்றம்

**ஆதரவு 22; எதிராக 11; 14 நாடுகள் கலந்துகொள்ளவில்லை**


Item 2: L.1/Rev.1 "Promoting reconciliation, accountability and human ...
ARGENTINA
ARMENIA
AUSTRIA
BAHAMAS
BAHRAIN
BANGLADESH
BOLIVIA (PLURINATIONAL OF)
BRAZIL
BULGARIA
BURKINA FASO
CAMEROON
CHINA
CÔTE D'IVOIRE
CUBA
CZECH REPUBLIC
DENMARK
IN FAVOUR 22

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பாக முன்வைக்கப்பட்ட பிரேரணை நேற்றைய தினம் 11 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நேற்றுப் பிற்பகல் இலங்கை நேரப்படி

06




### ஐ.நாவின் அடிப்படைக் கொள்கையை மீறியே பிரேரணை;

# குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றவை



**வெளிநாட்டமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவிப்பு**

**25 நாடுகள் பிரேரணைக்கு எதிரான நிலைப்பாட்டில்**

...ார ...தெரி

ஐக்கிய நாடுகள் சபையின் கொள்கை பிரகடனத்திற்கு எதிராக அதன் அங்கத்துவ நாடுகள் செயற்பட முடியாது என்பதை சுட்டிக்காட்டிய வெளிவிவகார அமைச்சர், அந்த கொள்கைக்கு முரணான வகையிலேயே ஒருங்கிணைந்த நாடுகள் செயற்பட்டுள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பாக முன்வைக்கப்பட்ட

06

### நாட்டுக்கும் சமூகத்துக்கும் சேவை செய்ய

## நாடளாவிய ரீதியில் தொண்டர்கள் தினம்



**வேலைத்திட்டத்திற்கு நாமல் ஏற்பாடு**

ஒவ்வொரு மாதமும் இறுதி வாரத்தின் சனிக்கிழமைகளில் தொண்டர்கள் தின வேலைத்திட்டமாக நாடளாவிய ரீதியில் சுயாதீன செயற்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ளதாக அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெளிவுபடுத்துகையில்;

எமது அமைச்சின் ஊடாக அமைப்பு ஒன்றை உருவாக்குவது எமது நோக்கம் அல்ல. எனினும்

06

## ஐ.நா... இலங்...

**எனினும் வழமைபோல் அரசு நிராகரிப்பு**



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை விவாதத்தில் நேற்று இலங்கை சார்பில் ஐ.நாவிற்கான இலங்கையின் நிரந்தர வதிவிட பிரதிநிதி சி.ஏ.சந்திரபிரேமா கருத்துரைத்திருந்தார்.

இந்த சந்தர்ப்பத்தில் கொண்டுவரப்பட்ட புதிய தீர்மானத்தை வழக்கம் போல இலங்கை நிராகரிப்பதாக அவர் அறிவித்துள்ளார்.

இதேநேரம் இலங்கை தொடர்பான ஐ.நாவின்

06

### ...க்கிடையில்

## ...பரஸ்பர நாணய பரிமாறல் உடன்படிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இலங்கை மற்றும் சீனாவுக்கு இடையிலான இரு தரப்பு பணப் பரிமாற்ற ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி மற்றும் சீன மக்கள் வங்கி ஆகியன மேற்படி இருதரப்பு



பணப் பரிமாற்ற ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளதுடன் அதற்கான ஒப்பந்த கைச்சாத்து நேற்று இடம்பெற்றது. அதற்கிணங்க சீன மக்கள் வங்கி இலங்கை மத்திய வங்கியுடன் 1.5 பில்லியன் அமெரிக்கன் டொலர்

06

### அரச தகவல் பணிப்பாளர்

## நாலக்க கலுவெவ நேற்று இராஜினாமா!



அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகம், நாலக கலுவெவ தனது பதவியிலிருந்து இராஜினாமா செய்துள்ளார். அவர் தனது தனிப்பட்ட காரணம் தொடர்பில் இராஜினாமா கடிதத்தை கையளித்துள்ளதாக, வெகுசன ஊடக

06



பாகிஸ்தானின் 81வது தேசிய தினம் நேற்று (23) கொழும்பில் உள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தில் நடைபெற்றது. பாக். உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு பெற்ற) முகம்மது சாத் கட்டக் பாகிஸ்தான் தேசியக் கொடியை ஏற்றியபோது... (படம்: அஷ்ரப் ஏ சமட்)

## நாட்டில் இரு வீதி விபத்துக்களில் பொலிஸ் அதிகாரி உட்பட மூவர் பலி

**ராஜகிரிய, கொட்டகலை பகுதிகளில் சம்பவம்**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டில் நேற்றைய தினம் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் பொலிஸ் அதிகாரி ஒருவர் உட்பட மூவர் பலியாகியதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இவ்வீதிவிபத்துக்கள் ராஜகிரிய மற்றும் கொட்டகலை பிரதேசங்களில் இடம்பெற்றதாகவும் ராஜகிரியவில் இடம்பெற்ற விபத்தில் பொலிஸ் அதிகாரி ஒருவரும் மற்றும் ஒரு நபரும் மரணமடைந்துள்ளனர் என்றும் கொட்டகலை பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில்

06

### நாட்டில் கோர விபத்துக்கள்

## கடந்த 81 நாட்களில் 508 பேர் மரணம்

இந்த வருடத்தின் கடந்த 81 நாட்களில் வாகன விபத்துக்களால் 508 பேர் உயிரிழந்தனர். 483 விபத்துக்களால் இவர்கள் மரணித்ததாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அதேநேரம் குறித்த காலப்பகுதியில் 1054 விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதுடன் அவற்றில் 2 ஆயிரத்து 488 பேர் காயமடைந்தனர்.

அத்துடன் வாகன விபத்துக்களால் 1284 சொத்துக்களும் சேதடைந்துள்ளதாக காவல்துறை தலைமையகம் தெரிவித்துள்ளது.

## 2,221 கிலோ உலர் மஞ்சள் பறிமுதல்




கல்பிட்டி முகத்துவாரம் கடற்கரையில் மற்றும் தலைமன்னார் குடுஇருப்பு கடற்கரையில் இலங்கை கடற்படையினர் மேற்கொண்ட சிறப்பு தேடுதல்

06

## வடக்கில் மிதமிஞ்சிய மணல் அகழ்வால் சுற்றுச்சூழல் ஆபத்து

**ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் எச்சரிக்கை**



கிளிநொச்சி இரணைமடு குளத்திற்கு நீரை கொண்டுவரும் கனகராயன் ஆற்றில் அளவுக்கு அதிகமான மணல் அகழ்வு இடம்பெற்றுவரும் நிலையில் எதிர்காலத்தில் பாரியளவில் பாதிப்புக்கள் உருவாகும் என வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம் சார்ள்ஸ் கூறியுள்ளார்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற ஆறுகளை பாதுகாப்போம். தேசிய நிகழ்ச்சி திட்டத்தில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே

06

### ஈஸ்டர் தாக்குதல் பரிந்துரை அறிக்கை

## அமைச்சரவை உப குழு இரு தினங்கள் கூடி ஆராயும்

**இறுதி அறிக்கை 31இல் ஜனாதிபதியிடம்**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவங்கள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள விசேட அமைச்சரவை உப குழு நேற்றும் இன்றும் குழுவின் தலைவர் அமைச்சர் சமல் ராஜபக்ஷவின் தலைமையில் கூடியுள்ளது.

மேற்படி விசாரணை அறிக்கை தொடர்பில் இறுதி பரிந்துரைகளை தயாரிப்பதற்காகவே இரண்டு தினங்களும் அமைச்சரவை உப குழு கூடியதுடன் குழுவின்

06

**விக்கல் வீராச்சாமி**



ஆயிரம் ரூபா கூட்டி தாறதில முதலாளிமார் விடாப்பிடியா நிற்கிறத பாத்தா கவலையா இருக்கு.....

அவங்க ஏதோ ஆயிரம் ரூபாவ மொத்தமா கூட்டி தார மாதிரி எல்லோ கவலைப்படுகினம், உண்மையில 125 அல்லது 150 ரூபாதான் கூடப்போகுது...!!!


